**R 4896 (page 387)** (தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்)

## FEEDING ON THE WORDS OF GOD

# கீழ்ப்படிதல் எனும் பரீட்சை

**R4897 : page 388**

இன்னொரு உதவிகரமான தேவ வார்த்தையானது யோவான் 2:5-ஆம் வசனத்தில் காணப்படுகின்றது; "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்." இங்குப் புதுச்சிருஷ்டியென நம்முடைய வளர்ச்சியினைக் கண்டுகொள்வதற்கு நாம் பரீட்சை ஒன்றினைப் பெற்றிருக்கின்றோம். தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே அதைக் கைக்கொள்ள முடியும், அதைப் பின்பற்றிட முடியும் மற்றும் அது முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்கிட முடியும். ஆனால் அவ்வேதவசனமானது, தேவ வசனத்தைக் கைக்கொள்வது என்பது சிரமமான காரியம் என்று தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய வார்த்தையானது நமக்கு முன்வைக்கிறவைகளைவிட, ஏன் நாம் உலகத்தையும், மாம்சத்தையும் பற்றிக்கொண்டு பின்பற்றிடலாமே என்பதற்கான பல்வேறு காரணங்கள் அனைத்துத் திசைகளிலிருந்தும் நமக்குக் கூறப்படுவது நம் செவிகளுக்குக் கேட்கின்றது. "இடுக்கமான வழியினின்று" நம்மை மயக்கி திசைமாற்றிட பல்வேறு கவர்ச்சிகள் காணப்படுகின்றன. ஆகையால் தேவ வசனங்களைப் பற்றிக்கொண்டு காணப்படுபவர்கள் "ஜெயம்கொண்டவர்களாய்" இருக்கின்றனர்.

இந்தத் தற்காலத்தில் நீதியாயும், தேவபக்தியாயும் ஜீவிப்பதற்கு நாம் மிகவும் உபத்திரவப்பட வேண்டியிருக்கும் என்று வேதவாக்கியங்களானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்(கள்" 2 தீமோத்தேயு 3:12). தற்போதைய சூழ்நிலைகளின் கீழ் உண்மையாய் இருத்தல் என்பது, மரணபரியந்தம் உண்மையாய் இருத்தலாகும். கருத்து என்னவெனில் நம்மிடம் தேவனுக்கான அன்பு இல்லையெனில், நாம் அவர் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய பிரயாசம் எடுக்கமாட்டோம்; இப்படி அன்பு இல்லையெனில், நாம் தேவ வார்த்தைகளைப் பின்பற்றவும் முடியாது, அதற்கு இசைவாகக் காணப்படவும் முடியாது, மரணபரியந்தம் அதற்காய்ச் சேவிக்கவும் முடியாது.

"இதோ தேவனே உம் சித்தம் செய்ய வருகின்றேன்!" என்று நமது கர்த்தராம் இயேசு கூறினபோது, அவர் தேவ வார்த்தைக்கான பூரண கீழ்ப்படிதலைச் சித்தரித்துக் காட்டினவராய் இருந்தார். புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருந்த அனைத்தையும், தேவனுடைய சித்தமாய்க் காணப்பட்ட அனைத்தையும், எப்படியேனும் செய்திடுவதற்கு அவர் மகிழ்ச்சியாய் இருந்தார். பிதாவுக்காக நமது கர்த்தர் இயேசு அன்புகொண்டிருக்கவில்லையெனில், அவரால் திவ்விய சித்தத்திற்கு இப்படியான ஒரு கீழ்ப்படிதலின் அளவை அடைந்திருக்க முடியாது. இப்படியாகவே நம் விஷயத்திலும் உள்ளது. தேவனுக்காகவும், நீதியின் கொள்கைகளுக்காகவும் நாம் அன்பு கொண்டிராதது வரையிலும், நம்மால் இவ்வழியில் தொடர முடியாது.

ஆகையால் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கென்று தங்கள் ஜீவியங்களைக் கையளிப்பவர்கள் மாத்திரமே, அவரது வார்த்தைகளைச் சரியாய்க் கைக்கொள்பவர்களாய் இருப்பார்கள். இந்த நிலையானது நாம் துவக்கத்தில் அர்ப்பணம் பண்ணினபோது நம்மால் அடையப்பட்டது என்று சொல்லலாம்; ஏனெனில் அர்ப்பணிப்பின்போது இருதயமானது அதன் சித்தத்தைத் துறந்து, கர்த்தருக்கு முழுமையாய்க் கையளித்திருந்ததாய் இருந்தது இருதயமானது: "என் சித்தமல்ல, உம் சித்தமே ஆகக்கடவது" என்றது. சுயத்தைப் பலிச்செலுத்துவதின் நிபந்தனைகளுக்கு இணங்குபவர்கள்

அனைவரும் பூரண அன்பு எனும் இலக்கினை அடைந்தவர்களாய் இருப்பார்கள். ஆம், உயிர்த்தெழுதலின் போது நாம் அடையப்போகும் இன்னொரு வகையான பூரணமும் இருக்கின்றதுதான். ஆனால் மரணபரியந்தமான உண்மையின் வாயிலாக தேவ வார்த்தைகளைக் கைக்கொள்பவர்கள் மாத்திரமே பரிசை அடைந்து, திவ்விய சுபாவத்துக்குப் பங்குகொள்பவர்கள் ஆவார்கள்.

கீழ்ப்படிதல் என்பதே பரீட்சையாய் இருக்கின்றது. எந்தளவுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோமோ, அவ்வளவாய் தேவ அன்பானது நம்மில் பூரணப்படுகின்றதாய் இருக்கும்; ஏனெனில் நாம் கிறிஸ்துவினுடைய மனதை, பரிசுத்த ஆவியை, தேவ ஆவியைப் பெற்றிருப்போமானால், இது நம்மால் முடிந்தமட்டும் தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி விரும்பவும், செய்யவும் நம்மை நடத்திடும். மேலும் "நம்மால் முடிந்தமட்டும்" என்பது வருடா வருடம் தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்கவேண்டும்.

---